*கவனிக்க.- 14.11.2024 ஆந் திகதிய 2411 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2412 - 2024 නොවැම්බර් මස 22 වැනි සිකුරාදා - 2024.11.22

*2412 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் அறிவித்தல்கள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின்கீழ் அறிவித்தல்கள் | - |
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | - |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | *484* |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்****, அதாவது 2024, திசெம்பர் மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2024, நவெம்பர் மாதம் 29 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக் கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு***

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

483 - B 82629 - 353 (2024/11)

# நானாவித காணி அறிவித்தல்கள்

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்.: 4/10/74289.
மாகாணக் காணி ஆணையாளரின் இலக்கம்.: NCP/PLC/L-11/04/
நொவ்/தீ. கா/தீ. கா.

**21 (2) ஆம் இலக்க அரசாங்க காணிகள் ஒழுங்குவிதிகளின் கீழான அறிவித்தல்**

அனுராதபுரம் மாவட்டத்தின் நொச்சியாகம பிரதேச செயலகப் பிரிவின் இலக்கம்: 328, திம்பிரிவெவ கிராம அலுவலர் பிரிவின் திம்பிரிவெவ கிராமத்தில் அமைந்துள்ள காணி அலுவலரால் தயாரிக்கப்பட்ட தோராயமான சுவட்டு வரைபடத்தின் துண்டு இலக்கம் 01 இனால் காண்பிக்கப்பட்டுள்ள ரூட்: 03, பர்ச்சஸ்: 08 பரப்பளவு கொண்ட அரசாங்க காணித் துண்டை வரத்தக நோகத்திற்காக திரு. விக்கிரமசிங்க மொஹொட்டி முதியன்சேலாகே அசந்த தினேஷ் சிரிமல்வத்த என்பவரின் பெயரில் குத்தகைக்கு கோரப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**02. கோரியுள்ள காணியின் எல்லைகள் கீழே குறிப்பிடப் பட்டுள்ளன:**

வடக்கு : திம்பிரிவெவ குளத்தின் பாதுகாக்கப்பட்ட பகுதி;
கிழக்கு : தர்மசேன என்பவரின் காணி;
தெற்கு : அசந்த தினேஷ் என்பவரின் காணி;
மேற்கு : அரசாங்கக் காணி.

03. கோரப்பட்டுள்ள காணியை தேவைப்படுகின்ற காரணத்திற்காக குத்தகைக்கு வழங்குவதற்கு முடியும். எனவே அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய நிபந்தனைகளின் கீழ் காணியை குத்தகைக்கு வழங்குவதற்கு அரசாங்கத்தினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(அ) **குத்தகைக் காலம்** .- முப்பது (30) வருடங்கள் (2024.08.08 ஆம் திகதி முதல் 2054.08.07 திகதி வரை)

**வருடாந்த குத்தகை தொகை**.- தலைமை மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில், 2024 ஆம் ஆண்டில் காணியின் மேம்படுத்தப்படாத பெறுமதியின் 2% ஆகும்.

(ஆ) குத்தகைக்குப் பெற்றுக்கொள்பவர் குத்தகை ஆரம்பிக்கும் திகதி முதல் ஒரு (01) வருட காலத்திற்குள் பிரதேச செயலாளர் திருப்தியடையும் வகையில் அபிவிருத்தி செய்தல் வேண்டும்;

(இ) குத்தகைக்குப் பெற்றுக்கொள்பவர் இந்தக் காணியை வர்த்தக நடவடிக்கைகள் தவிர வேறு நடவடிக்கைகளுக்கு பயன்படுத்திக்கொள்ளக் கூடாது;

(ஈ) பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்களினால் விதிக்கப்பட்டுள்ள ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இந்த குத்தகை உட்படுதல் வேண்டும்;

(ஊ) காணியை குத்தகைக்கு விடப்பட்டிருக்கையில் குத்தகைதாரர் காணியைப் பெற்றுக்கொண்ட விடயத்தை உரிய காலப் பகுதியினுள் நிறைவேற்றிக்கொள்வதற்கு தவறும் பட்சத்தில் குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்;

(எ) 2024.08.08 ஆந் திகதி முதல் குறைந்தது ஐந்து வருடங்கள் கழிவதற்குள் உப குத்தகை வழங்கப்பட முடியாது;

(ஏ) குத்தகைக்கான வாடகையை தொடர்ச்சியாக செலுத்த வேண்டுமென்பதோடு, குத்தகையைச் செலுத்துவதற்கு தவறும் பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகி விடும்.

இந்த அறிவித்தல் வெளியிடப்பட்ட திகதி முதல் 06 வார காலத்திற்குள் குறித்த காணியைக் குத்தகைக்கு வழங்கக் கூடாதென ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்களை எழுத்து மூலமாக எனக்கு அறிவிக்காவிட்டால் கோரிக்கைகிணங்க குத்தகைக்கு வழங்கப்படும்.

துசித்த கலப்பத்தி,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகம் சார்பாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
"மிஹிகத மெதுர",
காணிப் பிரதான செயலகம்,
இல. 1200/6,
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2024, நவெம்பர் 04.

11 - 213

---

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்.: 4/10/30986.
உதவி காணிக் ஆணையாளரின் இலக்கம்.: KN/LTL/658- A.

**அரச காணிகள் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்**

திருகோணமலை மாவட்டம் கந்தளாய் பிரதேச செயலக பிரிவின் 227L- பாத்தியகம கிராம அலுவலர் பிரிவின் கந்தளாய் கிராமத்தின் குடியேற்ற உத்தியோகத்தர் பருமட்டான

வரைபடத்தின் A இலக்க காணித்துண்டின் 10 பேர்ச் அளவுடைய அரச காணித்துண்டானது குடியிருப்பு நடவடிக்கைகளின் பொருட்டு ஹரக்கம கெதர நிமல் ஜயசிங்க எனும் பெயரில் குத்தகை அடிப்படையில் கோரப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**02. கோரியிருக்கும் நிலத்தின் எல்லைகள் பின்வருமாறு:**

வடக்கு : காணித்துண்டு இலக்கம் B;
கிழக்கு : காணித்துண்டு இலக்கம் B;
தெற்கு : காணித்துண்டு இலக்கம் B;
மேற்கு : காணித்துண்டு இலக்கம் B.

03. கோரியிருக்கும் காணியினைக் குறித்த தேவையின் பொருட்டு குத்தகைக்கு அனுமதிக்க முடியும். இதன்பொருட்டு அரசினால் விதிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகக் காணியினைக் குத்தகைக்கு வழங்குவதற்கு அரசு உத்தேசித்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்** .- முப்பது (30) வருடங்கள் (1995.06.15 ஆம் திகதி தொடக்கம் 2025.06.14 வரை)

**வருடாந்த குத்தகைப் பணம்**.- பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் 1995 ஆம் ஆண்டில் காணியின் அபிவிருத்தி செய்யப்படாத பெறுமதியில் 4% ஆகும்.

**தண்டப்பணம்**.- காணியின் அபிவிருத்தி செய்யப்பட்ட பெறுமதியின் 4% இன் மூன்று மடங்கு.

(ஆ) இக்குத்தகை ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து ஒரு வருட காலப்பகுதியினுள் மாகாணக் காணி ஆணையாளர்/ பிரதிக் காணி ஆணையாளர் / பிரதேச செயலாளர் ஆகியோரின் மனங்கவரும் வகையில் காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(இ) குத்தகைக்கு பெறுனரால் இக்காணியில் வசிப்பதற்கான வீடு ஒன்றினை நிர்மாணிக்கும் நடவடிக்கை தவிர்ந்த வேறு நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படக்கூடாது;

(ஈ) பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்கள் மூலம் விதிக்கப்பட்டிருக்கும் ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இக்குத்தகை கட்டுப்பட்டதாகும்;

(உ) காணியானது குத்தகைக்கு அனுமதிக்கப்பட்ட காலப் பகுதயினுள் குத்தகைதாரரினால் இக்காணியினைப் பெற்றுக் கொண்ட நோக்கத்தை உத்தேசித்த காலப் பகுதிக்குள் நிறைவேற்றிக் கொள்வதற்குத் தவறும் பட்சத்தில் இக்குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஊ) 1995.06.15 ஆம் திகதியிலிருந்து 05 வருடங்கள் முடிவடைவதற்கு முன்னர் துணைக் குத்தகை அல்லது கைமாற்றம் அனுமதி வழங்கப்படமாட்டாது;

(எ) குத்தகைப் பணத்தினை தொடர்ந்து செலுத்துதல் வேண்டும் என்பதுடன் குத்தகைப் பணத்தைச் செலுத்தத் தவறுமிடத்து குத்தகை ஒப்பந்தமானது சுயமாகவே இரத்தாகும்.

வர்த்தமான பத்திரிகையில் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து 06 வார காலப்பகுதியினுள் குறித்த காணியின் குத்தகைக்கு அனுமதி வழங்கக்கப்படகூடாதென ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்களைச் சுட்டிக்காட்டி எனக்கு எழுத்து மூலமான அறிவித்தல் கிடைக்கப்பெறாதவிடத்து கோரிக்கைக்கேற்ப காணி குத்தகைக்கு வழங்கப்படும்.

துசித கலபத்தி,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகம் சார்பாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
"மிஹிகத மெதுர",
காணிப் பிரதான செயலகம்,
இல. 1200/6,
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2024, நவெம்பர் 06.

11 - 214

---

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்.: 4/10/33888.
மாகாணக் காணி ஆணையாளரின் இலக்கம்.: EP/28/LES/TRI/TG/334.

## அரச காணிகள் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்

திருகோணமலை மாவட்டம் பட்டினமும் சூழலும் பிரதேச செயலக பிரிவிற்குட்டப்பட்ட 243 O - பூம்புகார் கிராம அலுவலர் பிரிவின் பாலையூற்று கிராமத்தின் எஃப்வீபி 15 வரைபடத்தின் 2321 ஆம் இலக்க காணித்துண்டின் 0.0259 ஹெக்டயர் அளவுடைய அரச காணித்துண்டானது குடியிருப்பு நடவடிக்கைகளின் பொருட்டு திரு. நாகன் கோணமலை எனும் பெயரில் குத்தகை அடிப்படையில் கோரப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**02. கோரியிருக்கும் நிலத்தின் எல்லைகள் பின்வருமாறு:**

காணித்துண்டு இலக்கம் 2321 இன் எல்லைகள்:-
வடக்கு : காணித்துண்டு இலக்கம் 2322 மற்றும் 2318;
கிழக்கு : காணித்துண்டு இலக்கம் 2318 மற்றும் 2320;
தெற்கு : காணித்துண்டு இலக்கம் 2320, 2345 மற்றும் 2344;
மேற்கு : காணித்துண்டு இலக்கம் 2344, 2343 மற்றும் 2322.

03. கோரியிருக்கும் காணியினைக் குறித்த தேவையின் பொருட்டு குத்தகைக்கு அனுமதிக்க முடியும். இதன்பொருட்டு அரசினால் விதிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகக் காணியினைக் குத்தகைக்கு வழங்குவதற்கு அரசு உத்தேசித்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்** .- முப்பது (30) வருடங்கள் (2015.04.10 ஆம் திகதி தொடக்கம் 2045.04.09 வரை)

**வருடாந்த குத்தகைப் பணம்**.- பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் 2015 ஆம் ஆண்டில் காணியின் அபிவிருத்தி செய்யப்படாத பெறுமதியில் 4% ஆகும்.

**தண்டப்பணம்**.- வருடாந்த குத்தகை பணத்தின் மூன்று மடங்கு.

(ஆ) குத்தகைக்கு பெறுனரால் இக்குத்தகை ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து ஒரு வருட காலப்பகுதியினுள் மாகாணக் காணி ஆணையாளர்/பிரதிக் காணி ஆணையாளர்/ பிரதேச செயலாளர் ஆகியோரின் மனங்கவரும் வகையில் காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(இ) குத்தகைக்கு பெறுனரால் இக்காணியில் வசிப்பதற்கான வீடு ஒன்றினை நிர்மாணிக்கும் நடவடிக்கை தவிர்ந்த வேறு நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படக்கூடாது;

(ஈ) பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்கள் மூலம் விதிக்கப்பட்டிருக்கும் ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இக்குத்தகை கட்டுப்பட்டதாகும்;

(உ) குறித்த காணியானது குத்தகைக்கு அனுமதிக்கப்பட்ட காலப் பகுதயினுள் குத்தகைதாரினால் இக்காணியினைப் பெற்றுக் கொண்ட நோக்கத்தை உத்தேசித்த காலப் பகுதிக்குள் நிறைவேற்றிக் கொள்வதற்குத் தவறும் பட்சத்தில் இக்குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஊ) 2015.04.10 ஆம் திகதியிலிருந்து 05 வருடங்கள் முடிவடைவதற்கு முன்னர் துணைக் குத்தகை அல்லது கைமாற்றம் அனுமதி வழங்கப்படமாட்டாது;

(எ) குத்தகைப் பணத்தினை தொடர்ந்து செலுத்துதல் வேண்டும் என்பதுடன் குத்தகைப் பணத்தைச் செலுத்தத் தவறுமிடத்து குத்தகை ஒப்பந்தமானது சுயமாகவே இரத்தாகும்.

வர்த்தமான பத்திகையில் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து 06 வார காலப்பகுதியினுள் குறித்த காணியின் குத்தகைக்கு அனுமதி வழங்கக்கப்படக்கூடாதென ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்களைச் சுட்டிக்காட்டி எனக்கு எழுத்து மூலமான அறிவித்தல் கிடைக்கப்பெறாதவிடத்து கோரிக்கைக்கேற்ப காணி குத்தகைக்கு வழங்கப்படும்.

துசித கலபத்தி,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகம் சார்பாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
"மிஹிகத மெதுர",
காணிப் பிரதான செயலகம்,
இல. 1200/6,
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2024, நவெம்பர் 06.

11 - 215

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.